16.04.2025 எம்.சி.ஓ.பி. எண்.90/2020 ம.சா.1 தங்கவேல்

**குறுக்கு விசாரணை**

2020 ஆம் ஆண்டு விபத்து நடந்தது. நான் வல்லம் கிராமத்திலிருந்து கிருஷ்ணாபுரம் செல்ல இருசக்கர வாகனத்தில் சென்றேன். எதிரில் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றால் அன்றே தொலைந்துவிட்டது. எனக்கு ஓட்டுநர் உரிமமே இல்லை என்றும் இருந்திருந்தால் அதன் நகல் பெற்று தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்றும் கார் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்து காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்து தாஸ் என்பவர் புகார் கொடுத்தார், அவர் என்னுடைய மாமா. தாஸ் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. தவறான தகவல் அளித்து கார் ஓட்டுநர் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கார் ஓட்டுநர் சரத்குமார் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் காரை ஓட்டியுள்ளதால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றாலும் சரியல்ல. ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். ம.சா.ஆ.8 ஜெராக்ஸ் தான் என்றும் அதனால் ம.சா.ஆ.8 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 ஜெராக்ஸ் தான் என்றும் அதனால் ம.சா.ஆ.9 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8, 9 ரசீதுகளின் அசலை வேறு காப்பீட்டு நிறுவனத்தில் கொடுத்து தொகையை பெற்றுக்கொண்டேன் என்றும் அதனால் தான் ம.சா.ஆ.8, 9 ரசீதுகளின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு லிவர், மார்பில் அடிப்பட்டது, எலும்பு முறிவு இல்லை. மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.